ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 1.2 – வீடுமின்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 1.2 – வீடுமின்

‡ வீடுமின் முற்றவும் ⋆
வீடு செய்து ⋆
உம்முயிர் வீடுடை யானிடை ⋆
வீடு செய்ம்மினே ॥ **1.2.1** ॥

மின்னின் நிலையில ⋆
மன்னுயிர் ஆக்கைகள் ⋆
என்னும் இடத்து ⋆
இறை உன்னுமின் நீரே ॥ **1.2.2** ॥

நீர் நுமதென்றிவை ⋆
வேர் முதல் மாய்த்து ⋆
இறை சேர்மின் உயிர்க்கு ⋆
அதன் நேர் நிறை இல்லே ॥ **1.2.3** ॥

இல்லதும் உள்ளதும் ⋆
அல்லதவன் உரு ⋆
எல்லையில் அந்நலம் ⋆
புல்கு பற்றற்றே ॥ **1.2.4** ॥

அற்றது பற்றெனில் ⋆
உற்றது வீடுயிர் ⋆
செற்றது மன்னுறில் ⋆
அற்றிறை பற்றே ॥ **1.2.5** ॥

பற்றிலன் ஈசனும் ⋆
முற்றவும் நின்றனன் ⋆
பற்றிலையாய் ⋆
அவன் முற்றில் அடங்கே ॥ **1.2.6** ॥

அடங்கெழில் சம்பத்து ⋆
அடங்கக் கண்டு ⋆
ஈசன் அடங்கெழில் அஃதென்று ⋆
அடங்குக உள்ளே ॥ **1.2.7** ॥

உள்ளம் உரை செயல் ⋆
உள்ள இம் மூன்றையும் ⋆
உள்ளிக் கெடுத்து ⋆
இறை உள்ளில் ஒடுங்கே ॥ **1.2.8** ॥

ஒடுங்க அவன் கண் ⋆
ஒடுங்கலும் எல்லாம் ⋆
விடும் பின்னும் ஆக்கை ⋆
விடும் பொழுதெண்ணே ॥ **1.2.9** ॥

எண் பெருக்கந் நலத்து ⋆
ஒண் பொருள் ஈறில ⋆
வண் புகழ் நாரணன் ⋆
திண் கழல் சேரே ॥ **1.2.10** ॥

‡ சேர்த்தடத் ⋆
தென் குருகூர்ச் சடகோபன் சொல் ⋆
சீர்த் தொடை ஆயிரத்து ⋆
ஓர்த்த இப்பத்தே ॥ **1.2.11** ॥

அடிவரவு — வீடுமின் மின்னின் நீர் இல்லதும் அற்றது பற்று அடங்கு உள்ளம் ஒடுங்க எண்பெரு சேர்த்தட பத்துடை

வீடுமின் முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்